


**11.01. 2025**

தலைப்புச் செய்திகள்

1. அயோத்தி ஸ்ரீராமஜென்மபூமி ஆலய ராம்லல்லா பிராண பிரதிஷ்டை செய்யப்பட்ட ஓராண்டு நிறைவு விழாவை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. நாடுமுழுவதும் 16 ஆயிரத்து 914 கோடி ரூபாய் மதிப்பிலான போதை பொருட்கள் சென்ற ஆண்டு கைப்பற்றப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விரைந்து முடிக்க திருச்சி உள்ளிட்ட 7 இடங்களில் தனி சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சட்டப்பேரவையில் தெரிவித்தார்

4. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக ஊழியர்களுக்கு பொங்கல் சாதனை ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

5. மலேஷிய ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ், சிராக்ஷெட்டி இணை - தென்கொரிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

பிரதமர் – அயோத்தி

அயோத்தி ஸ்ரீராமஜென்மபூமி ஆலய ராம்லல்லா பிராண பிரதிஷ்டை செய்யப்பட்ட ஓராண்டு நிறைவு விழாவை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை நிறைவேற்றுவதில் இப்புனித ராம்லல்லா புனிததலம் ஒருமாபெரும் உத்வேகமாக இருக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தவம், தியாகம், போராட்டங்களுக்கு மத்தியில் பல நூற்றாண்டுகளுக்கு பின்னர் கட்டமைக்கப்பட்ட இத்திருக்கோவில், நமது கலாச்சாரம் மற்றும் ஆன்மீகத்தை பறைசாற்றும் பாரம்பரிய சின்னமாக திகழ்கிறது என்று புகழாரம் சூட்டினார்.

3 நாட்கள் நடைபெறும் ஸ்ரீ ராம்லல்லா பிராண்பிரதிஷ்டை விழாவில், தங்கம் மற்றம் வெள்ளியால் நெய்யப்பட்ட ஆடை அலங்காரங்களுடன் சிறப்பு பூஜைகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ராமகதை உள்ளிட்ட பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளில் ஏராளமானோர் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖

பிரதமர்

**பிரதமர் திரு. நரேந்திரமோடி விக்சித்பாரத் இளம்** தலைவர்கள் கலந்துரையாடல் 2025-ல் நாளை பங்கேற்கிறார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் நவீன தொழில்நுட்பம், நீடித்த வளர்ச்சி, மகளிர் ஆளுமை, வேளாண்மை மற்றும் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இளையோர்களின் சிறந்த கட்டுரைகள் அடங்கிய தொகுப்பை பிரதமர் வெளியிடுகிறார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர்களின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பை உறுதிசெய்யும் வகையில் ஒருலட்சம் இளைஞர்களை இணைக்கும் நோக்கில் இந்நிகழ்ச்சி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

அமித்ஷா

**நாடுமுழுவதும் 16 ஆயிரத்து 914 கோடி** ரூபாய் மதிப்பிலான போதை பொருட்கள் சென்ற ஆண்டு கைப்பற்றப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற போதைப்பொருள் தடுப்பு மண்டல மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், சுதந்திரத்திற்கு பின்னர் மிகப்பெரிய எண்ணிக்கையில் போதைப் பொருட்கள் கைப்பபற்றபட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

தேசிய பாதுகாப்பை முன்னிலைபடுத்தவும், போதைப்பொருள் கடத்தலை தடுப்பதை நோக்கமாக கொண்டும் இம்மாநாடு நடைபெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு எதிரான நம் போராட்டத்தை மறுஆய்வு செய்து, புதிய நெறிமுறைகள் வகுக்கவேண்டிய தருணம் இது என்று குறிப்பிட்ட அமைச்சர், இதுதொடர்பான நெறிமுறைகள் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்றார்.

முன்னதாக தேசிய அளவிலான இருவாரகால போதைப் பொருள் ஒழிப்பு இயக்கம் மற்றும் போதை பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் **மானஸ் - 2** உதவிமைய சேவைகளின் விரிவாக்கத்தை அவர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖

**பியூஷ்கோயல்**

**உலகளவில் தரவு மையங்களின் மிகப்பெரிய இலக்காக** இந்தியாவை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வர்த்தக தொழிற்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், தூய்மை எரிசக்தி, தரவு பாதுகாப்பு, திறன்சார்ந்த வேலைவாய்ப்பு உள்ளிட்ட அரசின் நடவடிக்கைகளால் பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தை சிறப்பாக செயல்படுத்தும் நாடுகளில் இந்தியா முன்னிலை வகிப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**சட்டப்பேரவை**

பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விரைந்து முடிக்க சென்னை, மதுரை, நெல்லை, கோவை, திருச்சி உள்ளிட்ட 7 இடங்களில் தனி சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்

தமிழ்நாடு சட்டப்பேரவையில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு இன்று பதிலளித்து பேசிய முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்

**.. வாய்ஸ் ..**

மகளிருக்கான வேலைவாய்ப்பில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதாகவும், பாதுகாப்பு மிக்க மாநிலங்களில் தமிழகம் முதலிடம் வகிப்பதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

தேசிய பணவீக்கத்தை ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் பணவீக்கம் குறைவாக உள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மாநிலத்தில் 3 ஆயிரத்து 750 கோடி ரூபாய் மதிப்பில் நகர்ப்புற சாலை மேம்படுத்தப்படும் என்றும், வரும் 2 ஆண்டுகளில் ஒருலட்சம் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

3 ஆயிரம் புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறினார்.

புதுமைப்பெண் திட்டத்தால் உயர்கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கூறியஅவர், மகளிருக்கான இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமைத்தொகை உள்ளிட்ட திட்டங்களால் பெண்கள் பயனடைந்து வருவதாக எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழக சட்டப்பேரவை மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖

**ஊக்கத்தொகை**

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக ஊழியர்களுக்கு** பொங்கல் சாதனை ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 200 நாட்களுக்கு மேல் பணிபுரிந்த ஊழியர்களுக்கு 625 ரூபாய் வீதம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

151 முதல் 200 நாட்களுக்கு குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 195 ரூபாய் வீதமும்,

91 நாட்கள் முதல் 151 நாட்களுக்கு குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 85 ரூபாய் வீதமும் ஊக்கத்தொகை அளிக்கப்படும்.

போக்குவரத்து சேவைகளை சிறப்பாக வழங்கியதற்காக, ஒருலட்சத்து 8 ஆயிரத்து 105 பேருக்கு, 6 கோடியே 41 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

**கொடிகாத்த குமரன்**

விடுதலை போராட்ட வீரர் திருப்பூர் கொடிகாத்த குமரனின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது

இந்நாளையொட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட செய்தியில் 1932-ம் ஆண்டு ஆங்கிலேய அரசுக்கு எதிரான பேரணியின் போது தேசிய கொடியை தன் உயிருக்கும் மேலாக காத்து, உயிர்தியாகம் செய்த கொடிகாத்த குமரனை போற்றிவணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

**ஆர்.என்.ரவி**

**திருச்சி மாவட்டம் முசிறி அருகே எம்.ஐ.டி.** வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெறும் பொங்கல் விழாவில் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி பங்கேற்றார்.

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை தமிழ்மொழியில் தெரிவித்த ஆளுநர், கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்

கோ பூஜையில் பங்கேற்ற அவர், இயற்கை முறையில் பயிரிடப்பட்ட பயிர்களை பார்வையிட்டு அதுகுறித்து கேட்டறிந்தார்.

❖❖❖❖❖❖

**அண்ணாமலை**

மதுரை - தூத்துக்குடி இடையே அருப்புக்கோட்டை வழியாக புதிய ரயில்பாதை அமைக்கும் திட்டத்தை திமுக அரசு ரத்து செய்தது கண்டிக்கத்தக்கது என்று பி.ஜே.பி. மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி வளர்ச்சியடைந்த இந்தியா என்பதை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வரும் நிலையில், திமுக அரசின் இந்த நடவடிக்கை அருப்புக்கோட்டை மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக மாறியுள்ளதாக தமது சமூக வலைதளத்தில் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖

**குடியரசு தினம் வாய்ஸ்**

புதுதில்லி குடியரசு தலைவர் மாளிகையில் வரும் 26-ம் தேதி நடைபெறும் குடியரசு தின விருந்தில் பங்கேற்கவுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா தெரிவித்துள்ளார்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**நெல்லை வாய்ஸ்**

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அணையில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**திருச்செந்தூர் வாய்ஸ்**

**தைபூச திருவிழாவை முன்னிட்டு திருச்செந்தூர்** அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர்

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**இருவரி**

**தூத்துக்குடி துறைமுகத்தில் சமையல் எண்ணெய்** இறக்குமதி மற்றும் விநியோகம் 21 சதவிகிதம் அதிகமாக கையாண்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

கடலோர அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 2 லட்சத்து 97 ஆயிரம் டன் பாமாயில் மற்றும் 76 ஆயிரம் டன் சூரியகாந்தி எண்ணெயை இத்துறைமுகம் கையாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஜெர்மனி பிராங்புட்டில் வரும்** 14-ம் **தேதி தொடங்கும் சர்வதேச** ஜவுளி கண்காட்சியில் கரூரை சேர்ந்த 67 ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன.

இதன்மூலம் 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி ஆணைகள் வழங்கப்பட்டு வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என இந்திய ஏற்றுமதி சங்க தென்மண்டல தலைவர் திரு.கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே** விஜயகரிசல் குளத்தில் நடைபெற்று வரும் 3-ம் கட்ட அகழாய்வில் சங்கு வளையல்கள் மற்றும் பெரியகண்ணாடி மணி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மயிலாடுதுறை, தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் நாளை கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் வரும் 17-ம் தேதிவரை பரவலாக மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது

தென்தமிழக கடலோரம் மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்றும் நாளையும் இப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**மலேஷிய ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர்** அரையிறுதியில் இன்று இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ், சிராக்ஷெட்டி இணை - தென்கொரியாவின் **Won Ho, Seung** இணையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

ஹாக்கி

ரூர்கேலாவில் நடைபெறும் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று ஹைதராபாத் தூ.்.பான் அணி - சுர்மா ஹாக்கி கிளப் அணியையும்,

டெல்லி எஸ்.ஜி. பைப்பர்ஸ் அணி - யூ.பி. ருத்ராஸ் அணிணையும் எதிர்கொள்கின்றன.

❖❖❖❖❖❖